09.02.2026.

OS.29/2020

DW1- சுரேஷ் – த/பெ.நாராயணசாமி

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.02.2026.

குறுக்கு விசாரணை : (வாதி தரப்பில்)

1. நான் வழக்கில் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

2. 1ம் பிரதிவாதி எனது மனைவி என்றால் சரிதான்.

3. பிராது 1ம் தபசில் சொத்தை 10.01.2007ம் தேதி ஜமுனா ராணி ஒரு பவர் பத்திரம் மூலம் சுப்பையா நாயுடு குமாரர் S.M.S. சங்கரப்பன், S. முத்துகிருஷ்ணன், S. நவநீதிகிருஷ்ணன்,S. பிரேம் குமார், லேட் நாராயண சாமி மனைவி செல்வி, லேட்நாராயண சாமி குமாரர் சங்கர் ஆகியோரிடம் இருந்து பவர் பெற்றார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

4. ஜமுனா ராணி மேற்படி பொது அதிகார பத்திரத்தின் படி வாதிக்கு 01.02.2007 தேதியில் கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

5. 20.09.2002ம் தேதி திருமலையம்மாள், கோவிந்தராஜ், மகேஸ்வரபெருமாள் மற்றும் குருவம்மாள் ஆகியோர்களிடம் இருந்து பிராது 2ம் தபசில் சொத்தை வாதி கிரையம் பெற்றார் என்றால் சரிதான்.

6. என் வீட்டிற்கு பின்புறம் பொதுக்கிணறு உள்ளது என்றால் இல்லை.

7. என் வீட்டின் நீளம் 63.3/4 அடி மற்றும் அகலம் 20 அடி.

8. என் வீட்டின் 63.3/4 அடிக்கு பின்பு பொதுக்கிணறு உள்ளதா என்றால் இல்லை. அவ்வாறு கிணறு இருப்பதாக நான் உறுதிக்கூற்றிலோ, எதிர் வழக்குரையிலோ கூறியிருந்தார் அது தவறு என்றால் சரிதான்.

9. 3ம் தபசில் சொத்தை பார்வையிடுவதற்காக நீதிமன்றத்தில் ஆணையர் வந்தார் என்றால் சரிதான்.

10. ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

11. நீதிமன்ற ஆணையர் அறிக்கையுடன் தாக்கல் செய்த டவுண் சர்வே வரைபடத்தில் சர்வே எண்.186ல் பொதுக்கிணறு உள்ளது காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு விவரம் தெரிந்தவரை கிணறு இல்லை. மேற்படி கிணற்றின் சுற்றளவு 4 திசைகளிலும் 16.5 அடி என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

12. என் வீட்டிற்கு கிழக்கு பக்கம் தென்வடலாக நடைபாதை செல்கிறது என்றால் சரிதான்.

13. அந்த கிழக்கு பக்கம் உள்ள தென்வடல் நடைபாதை வழியாகத்தான் பிராது 3ம் தபசில் சொத்திற்கும் வாதிகளின் வீடான 1,2 அயிட்ட சொத்திற்கும் செல்லமுடியும் என்றால் சரியல்ல.

14. வழக்கு நடக்கும் போது 3ம் தபசில் சொத்தில் பொது கிணற்றிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் 5 அடி நீளத்தில் ¾ அடி அகலத்தில் சுற்றுசுவர் அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல வழக்கு நடப்பதற்கு முன்பே நான் 2017 ல் அதை அமைத்துவிட்டேன்.

15. அந்த சுற்றுசுவரில் வாசல் கிழக்கு பார்க்க உள்ளது என்றால் சரிதான்.

16. என் மாமனார் 2017 ல் சுற்றுசுவர் அமைத்த போது கிணற்றின் கீழ்பகுதி சிமெண்டால் பூசப்பட்டது என்றால் சரியல்ல.

17. நீதிமன்ற ஆணையர் ஸ்தல பார்வையிடும் போது கிணறு மூடப்பட்டு சிமெண்ட் தளம் போடப்பட்டிருந்தது என்றால் இல்லை மண்தரை தான் உள்ளது அங்கு கிணறு இல்லை.

18. நான் கூறும் மண்தரையில் செடி, கொடிகள் இருக்கின்றதா என்றால் இல்லை.

19. நான் சிமெண்ட் தளம் அமைக்கும் போது வாதி ஆட்சேபனை செய்ததை மீறி நான் சிமெண்ட் தளம் போட்டுவிட்டேன் என்றால் சரியல்ல நாளது வரை அங்கு சிமெண்ட் தளம் இல்லை.

20. வா.சா.ஆ.6 கிரைய பத்திரத்தில் பொது கிணற்றில் பங்கு இருப்பதாகத் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அங்கு கிணறே இல்லை.

21. நான் வீடு கட்டும் போது என் வீட்டின் கிழக்கு பக்க சுவரை 3 அடி ஆக்கிரமித்து கட்டியதோடு பொதுக் கிணற்றையும் மூடிவிட்டேன் என்றால் சரியல்ல.

22. நான் கிணற்றை மூடியதால் வாதியால் கிணற்றில் இருந்து தண்ணீர் இறைக்க முடியவில்லை என்றால் சரியல்ல.

23. நான்கிணற்றை மூடியதால் என் மீதும், என் மனைவி மீதும் தென்காசி காவல் நிலையத்தில் வாதி புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல வேறு காரணத்திற்காக புகார் கொடுத்தார். வேறு என்ன காரணம் என்றால் மேற்கு பக்க சுவரை பூசுவது சம்மந்தமாக புகார் கொடுத்தார். அந்த புகாரில் போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

24. நான் வாதி மீது முன்னெச்சரிக்கை தடை மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

25. நான் தாக்கல் செய்த முன்னெச்சரிக்கை தடை மனுவில் எல்கை விவரமாக தூர்ந்து போன பொதுக்கிணறை காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல.

26. என் முன் பத்திரங்களில் 3ம் தபசில் பொதுக்கிணறு என காண்பித்து தான் எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு 1980க்கு முன்பு எழுதியிருக்கலாம் எனக்கு தெரியாது.

27. என் கிரைய பத்திரத்தையோ, என் முன் ஆவணத்தையோ நான்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த பத்திரங்களில் கிணறு உள்ள விவரம் தெரியவரும் என்பதால் தான் அதை நான் மறைத்து இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

28. வா.சா.ஆ.3 கிரைய ஆவணத்தில் பொதுக்கிணறு உள்ளதாகத் தான் எல்கை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

29. வா.சா.ஆ.5 கிரைய ஆவணத்திலும் பொதுக்கிணறு உள்ளதாகத் தான் எல்கை காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆனால் அது பொதுக்கிணறு அல்ல.

30. கிணற்றை நான் தவறாக ஆக்கிரமிப்பு செய்ததற்கு வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக தவறாகக் கூறுகின்றேன் என்றும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதனை நான் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை தான் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.9 என்றால் சரியல்ல.

31. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு என்னால் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

32. நான் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுக்காமல் கிணற்றை மூடும் வேலையில் ஈடுபட்டதால் தான் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

33. 3ம் தபசில் சொத்தின் கிணறின் வயது சுமார் 110 இருக்கும் என்றால் சரியல்ல.

34. 3ம் தபசில் கிணற்றை வைத்து தான் வாதி மற்றும் மற்ற பாத்தியஸ்தர்கள் கிணற்றின் மூலம் தண்ணீர் இறைத்து வந்தனர் என்றும் கிணற்றில் எனக்கு எந்த தனிப்பட்ட உரிமையும் இல்லாததால் நான் கிணற்றை ஆக்கிரமிப்பு செய்ததை வாதி வசம் ஒப்புக்கொடுத்து பொது பயன்பாட்டிற்கு கொடுக்க சட்டப்படி கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

35. 3ம் தபசில் சொத்தில் என் மாமனார் அனுபவம் செய்து அதில் வடக்கோரம் ஒரு கழிவறை அமைத்துள்ளதாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

36. 05.04.1989ம் தேதி முதல் பிராது 3ம் தபசில் சொத்தில் வாதியோ, வேறு யாருமே அனுபவத்தில் இல்லை என நான் கூறுவது என்றால் சரியல்ல.

37. 3ம் தபசில் சொத்தை அனுபவ அடிப்படையில் என் மாமனார் ராஜேந்திரனுக்கு பாத்தியமானது என நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

38. 3ம் தபசில் சொத்தை மார்ச் 2019ம் வருடம் வாதி என்னிடம் கிரையம் கேட்டு நான் சொந்த உபயோகத்திற்கு தேவைப்படுவதால் கிரையம் கொடுக்க மறுத்துவிட்டேன் என்பதால் வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல.

39. எனவே என் கட்சி நிராகரிக்கப்பட்டு வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதிக்கவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி